

விசுவாசமுள்ள ஜெபத்தின் பதிலை 'நன்றி கூறுதலே' உறுதிப்படுத்தும்!

ஒரு ஜெபத்தைக் குறித்த காரியத்தில், விசுவாசம் பிறந்தவுடன் நான் உடனே தேவனைத் துதித்து, அவருக்கு நன்றிகூறி, அவரை மகிமைப்படுத்தத் தொடங்க வேண்டும்! அது ஏனென்றால், நான் ஜெபித்ததை 'இப்போதே' அவர் எனக்கு தந்துவிட்டார். ஜெபத்தில், இந்த இரண்டாவது பகுதியாகிய 'மகிழ்ச்சியும், நன்றியும்' உருவாகாத பட்சத்தில், ஒன்றையும் நாம் தேவனிடம் பெற்றுக்கொள்ள இயலாது! இந்த மகா இரகசியமான விசுவாசத்தை நான் பெற்ற அடுத்த கணமே "பதில் என்னும் பார்சல்" அனுப்பப்பட்டுவிட்டது! அதுஏனென்றால், பரலோகத்தின் விடை "விரைவு சேவையாய்" (Express Service) இருப்பதே காரணமாகும். நான் விசுவாசத்துடன் ஜெபித்ததைக் கண்ட தேவன், மிகுந்த வைராக்கியம் உடையவராய், முழு நிச்சயத்தோடு 'விரைவு சேவை மூலமாய்' எனக்கு அனுப்பி வைத்துவிட்டார்! இனி, அந்த பார்சல் என் கையில் வரை கிடைக்கும் வரை நான் மகிழ்ந்து களிகூருவதற்கு காத்திருக்க வேண்டுமோ? நான் துதித்து, மகிழ்ந்து, என் தேவனை கொண்டாடுகிறேன்! விசுவாச துதியினால் உண்டான பலனை என் கைமேல் பெற்றுக்கொண்டேன்!

– ரத்னம்